# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2109/13 - 2019 පෙබරවාරි මස 07 වැනි බ්‍රහස්පතින්දා - 2019.02.07

*2109/13 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 07 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

**அதியுத்தமராம் சனாதிபதி அவர்களினால் செய்யப்படும் பிரகடனம்**

(முத்திரை)

**மைத்திரிபால சிறிசேன.**

*2600 வருடங்களுக்கு முன்னர், உதித்த உன்னதமான ஆன்மீக தூதரான கௌதம புத்த பெருமான் நாற்பத்தைந்து வருடகாலம் உலக வாழ் மக்களுக்கு தயவுடனும் கருணையுடனும் போதித்த உன்னதம் மிக்க ஸ்ரீ தர்மமானது அதன் முதலாம், இரண்டாம், மூன்றாம் கலந்துரையாடல்களில் வணக்கத்துக்குரிய பிக்குமார்களினால் தொகுக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டமையினாலும், கௌதம புத்த பெருமான் மூன்று தடவைகள் இலங்கைத் தீவுக்கு வருகை தந்து உன்னதமான தர்மத்தை போதித்தமையினாலும், இரண்டாம் தேவநம்பியதீச மன்னனின் காலத்தில் மஹிந்த தேரர் இலங்கைக்கு வருகை தந்து இந்த உன்னதமான பௌத்த தர்மத்தை இலங்கையில் தாபித்து பிக்குமார் பரம்பரையொன்றை உருவாக்கியமையினாலும், இலங்கை பிக்குமார் பரம்பரையினர் இந்த உன்னதமான தர்மத்தை வாய்மொழி வழியாக பாதுகாத்து தொடர்ச்சியாக பேணி தற்போது நடைமுறையிலுள்ள கிறிஸ்துவுக்கு முன் முதலாம் நூற்றாண்டில் வலகம்பா மன்னனின் காலத்தில் மாத்தளை அலுலென் விஹாரையில் ஓலைச் சுவடிகளில் புனித பௌத்த தர்ம திரிபீடகத்தை பாளி மொழியில் ஆவணப்படுத்தி பாதுகாத்தமையினாலும்,*

*இவ்வாறு பாதுகாக்கப்பட்டு வந்த இந்த உன்னதமான தர்மத்தினை அடிப்படையாகக் கொண்டு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக இலங்கையின் அடையாளத்தை வெளிப்படுத்தியமையினாலும், ஸ்ரீ சம்புத்த ஜயந்தியை முன்னிட்டு ஸ்ரீ புத்த வருடம் 2500 இல் (கி.பி. 1956) இலங்கை அரசாங்கத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை பௌத்த சபையானது, இந்த பாளி மொழியிலான புனித திரிபீடக நூலை சிங்கள மொழியில் மொழிபெயர்த்து பதிப்பித்துள்ளமையினாலும், ஸ்ரீ புத்த வருடம் 2358, பங்குனி மாதம் 02 ஆந் திகதி (கி.பி. 1815, மாச்சு 02) மலைநாட்டு இராசதானியை ஆங்கிலேயர் ஆட்சிக்குள் கொண்டு வருவதற்காகச் செய்து கொள்ளப்பட்ட மலைநாட்டு உடன்படிக்கையின் 05 ஆம் பிரிவின் மூலம் புத்தசாசனத்தைப் பாதுகாத்து பேணி வளர்த்தல் ஆட்சியாளர்களில் முக்கிய கடமையாக ஏற்றுக் கொள்ளப்பட்டமையினாலும்,*

ஸ்ரீ புத்த வருடம் 2428 இல் (கி. பி. 1885) இலங்கை அரசாங்கத்தினால் வடிவமைக்கப்பட்ட பௌத்த கொடியானது, உலகில் உள்ள சகல நாடுகளினாலும் பௌத்த கொடியாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளமையினாலும், ஸ்ரீ புத்த வருடம் 2551 (கி. பி. 1978) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 09 ஆம் உறுப்புரைக்கு அமைவாக பௌத்த மதத்துக்கு முதன்மைத்தானம் வழங்கி பௌத்த சாசனத்தைப் பாதுகாத்து பேணி வளர்த்தல் அரசாங்கத்தின் கடமையாக உறுதிப்படுத்தியுள்ள மையினாலும்,

ஸ்ரீ புத்த வருடம் 2542 இல் (கி. பி. 1999) இலங்கைக் குடியரசு ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையில் முன்வைத்த பிரேரிப்பொன்றுக்கு அமைவாக ஸ்ரீ புத்த வருடம் 2544 இலிருந்து (கி. பி. 2001) கௌதம புத்த பெருமானின் மூன்று முக்கிய நிகழ்வுகளும் நடந்த தினமான வெசாக் பௌர்ணமி தினம் உலக விழாவாகப் பிரகடனப்படுத்திக் கொள்ளப்பட்டமையினாலும், ஸ்ரீ புத்த வருடம் 2560, வைகாசி மாதம் (கி. பி. 2017, மே) இலங்கையில் நடாத்தப்பட்ட ஐக்கிய நாடுகளின் வெசாக் பண்டிகை மற்றும் சர்வதேச மாநாட்டின்போது ஸ்ரீ புத்த வருடம் 2560, வைகாசி மாதம் 14 ஆந் திகதி (கி. பி. 2017, மே 14) கண்டி ஸ்ரீ தலதா மாளிகையின் மஹாமலுவயில் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்ட கண்டிப் பிரகடனத்திற்கு அமைவாக இலங்கை பௌத்த மதத்தின் தலைமையகமாக ஏற்றுக் கொள்ளப்பட்டமையினாலும் எதிர்கால சந்ததியினருக்கு இந்த உன்னதமான தர்மத்தைப் பேணி வளர்த்தல் இலங்கைக் குடியரசின் கட்டாய கடமையாகுமென்பதனாலும்,

கௌதம புத்த பெருமான் போதித்தருளிய மாத்தளை அலுலென் விஹாரையில் ஓலைச் சுவடிகளில் ஆவணப்படுத்தப்பட்ட புனித திரிபீடக தர்மம் மற்றும் 1956 ஆம் ஆண்டின் 2500 ஆம் ஸ்ரீ சம்புத்த ஜயந்தியைக் கொண்டாடும் முகமாக இலங்கைப் பௌத்த சபையினால் சிங்கள மொழிபெயர்ப்புடன் வெளியிடப்பட்ட பாளி மொழி மூல புனித திரிபீடகத்தில் கௌதம புத்த பெருமான் போதித்தருளிய தர்மம் எவ்வித மாற்றங்களுமின்றி அவ்வாறே உள்ளடக்கப்பட்டுள்ளமையினாலும் இந்த புனித தர்மத்தை திரிபுபடுத்தி பௌத்த தர்மத்தின் உன்னத தன்மைக்கு பங்கம் விளைவிப்பதற்கும் இதற்குப் பிழையான வரைவிலக்கணத்தை வழங்குவதற்கும் இதனை அவமதிப்பதற்கும் சிலர் செயலாற்றுகின்றமையினாலும் அத்தகைய தலையீடுகளிலிருந்து திரிபீடக தர்மத்தைப் பாதுகாக்கும் தூய சிந்தையுடன் பாளி மொழியிலும் சிங்கள மொழியிலும் ஆவணப்படுத்தப்பட்டுள்ள புனித திரிபீடக நூலை தேசிய மரபுரிமைகளில் ஒன்றாக நான் பிரகடனப்படுத்துகின்றேன்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 33(2)(ஏ) துணை உறுப்புரையின் மூலம் எனக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு அமைவாக இந்த கட்டளையைப் பிரகடனப்படுத்துகின்றேன். அத்துடன் என்னால் நியமிக்கப்படும் புனித திரிபீடக நூல் தொகுப்புச் சபையின் அங்கீகாரமின்றி இந்தப் புனித திரிபீடக நூலை மீண்டும் அச்சிடுவதோ அல்லது தொகுப்பதோ ஆகாதெனவும் நான் இத்தால் கட்டளையிடுகின்றேன்.

இரண்டாயிரத்துப் பத்தொன்பதாம் ஆண்டு பெப்புருவரி மாதம் 07 ஆந் திகதி கொழும்பில் கைச்சாத்திடப்பட்டது.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

**உதய ஆர். செனெவிரத்ன,**
சனாதிபதியின் செயலாளர்.

02-749

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.